I ADDL. DISTRICT & SESSIONS COURT, VELLORE
DEPOSITIONS OF WITNESSES
(CHAPTER XXIII CODE OF CIVIL PROCEDURE)
DEPOSITIONS OF WITNESSES P.W.2
M.C.O.P.NO.391/2024

| | | |
|---|---|---|
| Name | : | Rajesh |
| Father Name | : | Dhanapal |
| Age | : | 41 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 24.11.2025

**விசாரணை தொடங்கிய நேரம் : 12.15 p.m**

**இரு தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் 12ம் வகுப்பு படித்திருக்கிறேன். எனக்கு தமிழ் எழுத படிக்க தெரியும். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் நான் சொல்லித்தான் எனது வழக்கறிஞர் தயார் செய்தார். அதிலுள்ள விவரம் எனக்கு தெரியும். நான் படித்து பார்த்து தெரிந்து கொண்டு தான் கையொப்பம் செய்தேன். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதிலுள்ள விவரங்கள் உண்மையென்று உறுதியளிக்கிறேன். என்னுடைய பிரமாண வாக்குமூலத்தை சாட்சியமாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.

ம.சா.ஆ. 14 – என்னுடைய ஆதார் கார்டு நகல்

**2 வது எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

விபத்து எந்த தேதியில் நடந்தது என்றால் 09.04.2024 சுமார் மாலை 06.45 மணிக்கு இருக்கும். நான் தண்ணீர் கேன் போடும்

வேலை செய்கிறேன். அந்த இடத்தில் தண்ணீர் கேன் போதுவதற்காக இருந்தேன்.அப்போது தனியார் பேருந்து கார் மீது மோதியது. அந்த பேருந்து பெயர் Hariharan என்று இருந்தது. இது காட்பாடி டூ குடியாத்தம் போகும் பேருந்து. அந்த பேருந்து கார் மீது மோதியதை நான் பார்த்தேன். அந்த பேருந்து எண்.1399. கார் எண். 0867. அந்த கார் யார் ஓட்டி வந்ததுள என்றால் யுவராஜ் என்பவர் தான் ஓட்டி வந்தார். அவர் ஓட்டுனர் இருக்கையில் இருந்தார்.அவர் அப்போது உயிருடன் தான் இருந்தார். நான் அவரை மருத்துவமனையில் சேர்க்கவில்லை. எனக்கு இறந்தவர் பெயர் எப்படி தெரியும் என்றால் அவர் தம்பி எனக்கு ரொம்ப பழக்கம், அதனால் அவர் பெயர் தெரியும். நான் போலிசிடம் புகார் கொடுக்கவில்லை. என்னை குற்றவியல் நீதிமன்றத்தில் விசாரிக்கவில்லை. முதல் தகவல் அறிக்கையை நான் படித்து பார்க்கவில்லை. அவருடைய கவனக்குறைவால் தான் இந்த விபத்து நடந்தது என்றாலும் அவர் குடிபோதையில் இருந்தார் என்றாலும் சரியல்ல. அவருடைய பிரேத பரிசோதனை அறிக்கையில் அவ்வாறு தான் குறிப்பிட்டுள்ளார்கள் என்றாலும் நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. அவர் எனக்கு தெரிந்தவர் என்பதால் அவருக்கு சாதகமாக சாட்சியம் அளிக்க தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. விபத்து குறித்து நேரடியாக எதுவும் தெரியாது என்றாலும் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. நீதிமன்றத்திலிருந்து எனக்கு அழைப்பாணை வரவில்லை. மனுதாரர் கேட்டு கொண்டதால் தான் வந்தேன். என்னுடைய பிரமாண வாக்குமூலம் நான்

சொல்லி தான் தயார் செய்தார்கள்.

**விசாரணை முடிந்த நேரம் : 12.40 p.m**

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு கையெழுத்திட்டார்.

G SANTHI

Digitally signed by G SANTHI
Date: 2025.11.24 17:43:32 +0530

முதலாவது கூடுதல் அமர்வு நீதிபதி, வேலூர்